உ
சிவமயம்



திருவாளர்

## டொக்டர் ச. அ. வெற்றிவேலு L. M. S.

அவர்களின்

இறை பதம் எய்திய

# நினைவஞ்சலி மலர்

15 - 10 - 1985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் ச. அ. வெற்றிவேலு L. M. S.

அவர்கள்



தோற்றம்: 13 — 07 — 1904 உதிர்வு: 15 — 10 — 1985

*திருவோங்கு செம்முகமும் சிவமோங்கு திருவுளமும்*
*பொருளோங்கு இன்சொல்லும் புவியோங்கு செய்பணியும்*
*மருவோங்கு மலாக்குழலாள் மாதுபரா சத்தியுடன்*
*அருளோங்கு வெற்றியர்தான் அணியோங்க வாழ்ந்தனனே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

**பண்:** நட்டபாடை

விருது குன்றமா மேருவில் நாணர
வாவ நல் எரி அம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடல் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரம் கைதொழக்
கடுவினை யடையாவே.

## திருவாசகம்

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரக் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளு மிறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்று கொலோ
என் பொல்லா மணியைப் புணர்ந்தே.

## திருவிசைப்பா

தனதனற் றோழா சங்கரா சூல பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே கண்கள் மூன்றுடையதோர் கரும்பே
அன்கனே குமர விநாயக சனக அம்பலத் தமர சேகரனே
உனகன கழலிணை என்நெஞ்சினுள் இளிதர தொண்டனேன் நுகருமா நுகரே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மித் திருஆரூரின்
மழவிடையாற்கு வழிவழியாய் மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம்

ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொ மூன்றும் திருந்து சாத்விகமே யாக
விந்துவாழ் சடையா னாடும் ஆனந்த எல்லையின் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறில மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இரா : இராகமாலிகை தாள - ஆதி

(செஞ்சுருட்டி)

அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர் மேலாய்

(புன்னாகவராளி)

இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ உனது முனோடி வரவேணும்

(நாதநாமக்கிரியா)

மகபதியாகி மருவு வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேடன் அருளிய பூசை மகிழ்கதிர் காம முடையோனே

(சிந்து பைரவி)

ஜெககண சேகு தகு திமி தோதி திமியென ஆடும் மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவு பெருமாளே.

## திருச்சிற்றம்பலம்

ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்லப் பெண்டிர் சதமல்லப் பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்தாள் சதங்கச்சி யேகம்பனே

(பட்டினத்தார் பாடல்)

## திதி வெண்பா

ஆண்டு குரோத னவி லானகன்னி பூர்வபக்கத்
தீண்டு பிரதமையிர் பத்தொன்பான்-காண்தேதி
வெற்றிவேலு டாக்டர் மிகுமன்பின் மேவினார்
கற்றைச் சடையான் கழல்.

## ஆசிரியப்பா

பொன்னம் பூங்கழிக் கானல் துணையொடு
அன்னம் வைகும் அக்கரை மருங்கே.
ஆரல் வாரி அணிசேர் நாரை
சூரை சூழ்ந்த புன்னையம் கொம்பின்
மேலே அமர்ந்து தம்பசி போக்கும்.
கத்தும் தரங்கம் எடுத்து வீசும்
முத்துடைச் சிப்பி மோதி அலையும்
ஊரும் ஊரி மூரி வாலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிய சித்திரம் கீறி நகரும்
வலம்புரிச் சங்கம் மண்ணில் தவழ்ந்து
இலங்கும் முத்தம் ஈன்று திரும்பும்
வெண்ணிறக் கொக்கு வீற்றிருந்தென்ன
தண்ணிழல் தாழும் பூதலே சாய்க்கும்.
இத்தகைத் தென்திசை எல்லைய தாக
மெத்தப் பரந்த கடலும் வடபால்
ஓரிரு மைல்கல் தூரத் திடத்துச்
சீரிய வளநிலம் திருவெலாம் பொலிய
மாபலா தென்னை வளமிகு சோலையும்
வணிகப் பெருங்குடி மக்கள் தம்மொடு
மாண்புறு வேளாண் மரபினர் மருவியும்
வதியும் இடமாம் வாய்க்கப் பெற்ற
கொழும்புத் துறையெனும் ஊராம் ஆங்கே
விக்கினம் போக்கு விநாயக ராலயம்
பக்கலில் உள்ள பாட சாலையும்
நம்சிவ யோக சுவாமிகள் இருக்கையும்
ஊரின் பெருமையை உயர்த்திக் காட்டும்
இங்குள சூழலில் ஏத்து வேளாண்
மரபு மரபாய் வந்தோர் தம்மில்
சங்கிலி மன்னன் காலத் தரண்மனை
முகாமை யாளராய் முன்னர் இருந்தோன்
இராம நாத நாமத் தோனே.
அவன் மகன் வேலா யுதம்மகன் சண்முகம்
தன்மகன் அப்பாக் குட்டி என்பான்.
திருநெல் வேலியில் செப்பு வேளாண்
மரபில் வந்த வண்ண மகளாம்
அன்னப் பிள்ளையாம் ஆரணங் கவளை
அருமணஞ் செய்து அடைந்த மக்கள்
அன்ன லட்சுமி அமிர்த வல்லி
தங்க ரத்தினம் நல்லை யாபின்
வெற்றி வேலு தர்ம லிங்கம்
என்னும் நாமத் திருமூ வராமே.
நடரா சாவெனும் பெயரோன் அவனே
அன்ன லட்சுமியை அணைந்தவ னவான்
தம்பி ராசத் தகையோன் அடுத்த
அமிர்த வல்லியை அடையப் பெற்றான்
பரம நாதப் பண்பா ளன்பின்
பற்றிய மங்கை தங்கரத் தினமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் மகனவன் சட்டத் தரணி
நல்லை யாவெனும் நாமத் தோனாம்.
ஐந்தாம் மகனாய் அவனி மதிக்க
வந்தோன் வெற்றி வேலுவாம் நீயே
ஈற்றில் வந்தோன் இவனே டொக்டர்
தரும லிங்கச் சங்கையோன் ஆவான்.
டாக்டர் ஆகநீ இருந்த காலம்
வாழ்க்கைத் துணைவியை வரிக்க எண்ண
சட்டத் தரணி கந்தை யாதான்
பெற்ற மக்கள் பெண்பரா சத்தி
நடன கனக சபையவர் பின்னர்
செகராச சேகரன் சிவகாம வல்லி
பரரா சிங்கம் அன்ன லட்சுமி
பரம சுந்தரி என்போர் உள்ளே
சிரேட்ட மகளாம் தன்பரா சத்தியை
அந்தணர் பெரியோர் அங்கி சான்றாய்ப்
பேரன் துரையப் பாவும் அவர்தன்
மனையள் மாணிக் கமுமே சேர்ந்து
தாரை வார்த்துத் தந்திடப் பெற்றாய்.
ஏனை மக்களாம் கனக சபைக்கு
நாகம் மாளெனும் நல்லாள் தன்னையும்
செகராச சேகரச சேயோன் தனக்குப்
பரிமளம் என்னும் பாவை தன்னையும்
சிவகா மவல்லிச் சேயள் தனக்கு
முன்நாள் M. P. அருளம் பலத்தையும்
பரரா சசிங்கனாம் பாலன் தனக்கு
தனலட் சாமியாம் தவத்தள் தனக்கும்
அன்ன லட்சுமியாம் ஆரணங் கவட்டு
பொறியியல் ஆளன் சக்தி வேலையும்
பரம சுந்தரிப் பாவை தனக்கு
குமார சாமிக் குணத்தோன் தன்னையும்
திருமணஞ் செய்துநீ சேர்ந்து களித்தாய்.
எல்லோர் போலவும் பிரபஞ்ச உலகில்
இல்லற மென்னும் நல்லற ஏணியில்
மெல்லடி வைத்து விளங்கிய காலை
மங்கல மென்ப மனைமாட் சியதன்
நன்கல மாக நல்ல மக்களாய்
டொக்டராம் ஞானேஸ் வரனைப் M. B. B. S. பெற்றாய்
அவனே ஆளெனும் அழகியை மணந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு வாழ்வில் களிக்கக் கண்டாய்
அடுத்த மகன்யோ கேஸ்வரன் என்பான்
அனைத்தாம் உலகும் அறியும் ஒருவனுய்
முன்நாள் எம்பி ஆக இருந்தவன்
பீஏ பட்ட தாரி யான
சரோஜினி என்னுஞ் சற்குண வதியை
உருமைய ளாக்கி உவப்பக் களித்தாய்
மூன்ரும் மகனே முழுநம் இலங்கையும்
வியத்தகு பட்டமாம் M.D (USA) M.R.CO.G. (U.K.)
பட்டம் பெற்ற டொக்ரர் ஆன
மகேஸ்வர னவனும் வண்ண மகளாம்
வாசுகி என்னும் வனிதையை மணந்து
மீரா முரளி என்னும் இருவரைப்
பேரராய் நினக்குத தந்திட மகிழ்ந்தாய்
நான்காம் மகனே இராசேஸ் வரனும்
இவனும் டொக்ரர் M. R. C. P., M. R. C. G. P.
என்னும் பட்டம் பெற்ற தன்றி
இல்லக் கிளத்தி யாகத் தெரிந்து
தன்னைப் போன்ற டொக்ரர் ஆன
டொக்டர் M. B. B. S. சந்திரா தன்னை
மணந்து மலர்ந்த மலர்க ளாக
நிரஞ்சனி சுரேந்திரன் என்னும் மக்களைப்
பெற்று நினக்குப் பேரர் ஆக்கினர்.
ஐந்தாம் மகளே பால யோகனி
அண்ணன் மார்போல் தனக்கும் நல்ல
ஆடவன் தன்னை டொக்டராய விரும்ப
டொக்டர் Ph. D C. C. S. கலாநிதி ஆன
இராம நாதனும் இளவலை மணந்து
டொக்டர் ரமேஸ்குமார் M. B B. S. தன்னையும்
ராதிகா காங்கேசன் என்போர் தம்மையும்
மக்களாய்ப் பெற்றிட மகிழ்ச்சியில் நீந்திஞய்
அடுத்த மகளே கமலேஸ் வரியள்
அவட்கும் வாய்த்தோன் அவனும் டொக்டர்
M. R. C. P. நடரா சாவெனும் நல்லோன்
இவர்கள் பெற்ற செந்தில் குமரொடு
ஸ்ரீகுமார் வைத்திய இறுதிப் பரீட்சை
முடிக்கும் பருவத்துள்ளோர் ஆவர்
இவர்கள் தம்மொடு கமலினி என்னும்
இலங்கு மணிகளாய் இதயத் தேத்தினை
ஏழாம் மகளே சிவகுமா ரியான
B Sc. பட்டதாரி என்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் தன் கணவன் நயாபரன் என்போன்
டொக்டர் M.R.C.P. (psy) F.F.A.R.C.S (ENG) ஆவன்
இவர்கள் தமக்கும் இனிய மக்கள்
நிருபன் அருளன் என்போர் இருவரே.
இவர்கள் தம்மையு மினிக்கச் சுவைத்தாய்
கனிஷ்டன் டொக்டர் செகதீஸ் வழியே M. B B. S.
கணவன் டொக்டர் ஜெயப்பிர காசன்
அவனும் FRCS (ENG) FRCS (EDIN) ஆன தோடு
சத்திர சிகிச்சை நிபுணனும் ஆவன்
அவர்கள் இருவரும் அமைந்து பெற்ற
வாரி மிதிலன் இருவர் நம்மையும்
வாணி யணைக்கும் வாய்ப்பைப் பெற்றும்
இனிநின் வாழ்வின் இளமை எழிலைக்
கனிய நோக்கும் கடப்பா டுடையோம்
இளமை வாழ்வில் இனித்தது கல்வி
லோறஞ் புலமைப் பரிசில் அழைத்து
றோயல் கல்லூரி உகந்துனை ஏற்றது
அங்கிருந் தழைத்தது அடுத்த புலமை
அதுவே மருத்துவக் கல்லூரிப் புலமை
லோறஞ் என்னும் உயர்வாம் பரிசில்
எவர்க்கும் கிடைக்கா இனிய பரிசில்
தனிப்பெருந் துறைக்கெனத் தந்த பரிசில்
உடற்கூற்றியல் நிபுணன் ஆக உயர்ந்ததால்
தங்கப் பதக்கம் அதற்கெனப் பெற்றும்
இறுதிப் பரீட்சை முதலாம் பிரிவில்
சித்தி எய்திய சிறப்பும் உடைமை
அரச சேவை ஆரம்பம் ஆனது
அடுத்துப் பத்து வருடம் சேவை
கீழ்மா காணம் வன்னிக் காட்டில்,
சேவை வீதில் ஆற்றும் திருப்பணி ஏற்றும்
வாகனப் போக்கே வாரா தங்கே
வன்னிக் காடே வாசஸ் தலமாம்
கூடாரம் அடித்துக் கூசாது வாழ்ந்தாய்
பழைய பஞ்சி வருத்தும் வந்து
பலரை வருத்தத் தொடங்கிய அதனால்
அதனை மாற்ற அறியாச் சமயம்
துணிவு கொண்டு தொடங்கினை வைத்தியம்
அனுபவ ரீதி ஆக அதற்குப்
புதிய முறையில் வெற்றிகண்டாய்
இதனைக் கண்ட இலங்கை நிபுணர்
வாயிற் கையை வைத்து மதித்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சிய தோடு மேலும் ஐக்கிய
நாட்டு நிபுணரும் நன்குனைப் போற்றினர்
பாராட் டின்மேற் பாராட்டனுப்பினர்
இந்தக் கால் நினது வாழ்க்கை
காட்டின் நடுவே கரடி புலிகள்
கூட்டம் போட நினையும் கூப்பிடும்
பாம்பு தேள்கள் படுக்கையி லுறங்கும்
நுளம்பு கீதம் இசைத்து நுண்ணிய
ஊசி ஏற்றி உன்னில் பழகும்.
குள்ள நரிகள் சங்கம் ஊத
முள்ளம் பன்றி சல்லரி போட
கேட்கும் மந்தியும் தாளம் போட
கோட்டான் குருவி பாட்டுப் பாடும்
இவ்விதம் திருக்கோண மலையொடு பின்னர்
யாழ்ப் பாணம் மன்னார் இடங்களில்
சேவை செய்து நோய்வாய்ப்பட்டதால்
இறுகப் பிடித்தது பொல்லா வருத்தம்.
என்னநீ செய்தாய் இளைப்பே ஆறி
அரச சேவையை அறுத்தே எறிந்தபின்
இரண்டோர் ஆண்டாய் இருந்தாய் வீட்டில்
நோயால் வருந்தும் மக்களை நோக்கினாய்
இரக்கங் கொண்டு எழுந்தாய் மெல்ல,
சொந்த வைத்தியஞ் செய்யத் தொடங்கினாய்
குணமெனுங் குன்றில் குதித்தே ஏறினாய்
பணமெனும் அருவி ஆறாய்ப் பாய்ந்தது,
மருந்து மரமாய் மாறிநீ விட்டாய்
நச்சு மரங்கள் சப்புக் கொட்டின
பீ எஸ் அவர்கள் பெற்ற புகழ் போல்
வெற்றியர் வெற்றியர் என்று மெச்சினர்
டாக்டர் சுப்பிர மணியம் பின்னர்
பீ எஸ் ஆகக் குறுகிய போல
வெற்றி வேலு வெற்றியர் ஆனது
சிவகா ருண்யம் தேடி வந்தது
அர்த்த சாமம் அரும்பகல் ஆனது
கஷ்டப் பட்டோர் கருத்தினை உணர்ந்து
இஷ்டமாய் மருந்தும் பணமும் கொடுப்பை
சமுகம் வாழத் தமிழர் வாழத்
தணியா வீறு கொண்டே எழுந்தாய்
வைத்தியத் துறையில் மட்டும் அன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷிகத் துறையின் நுட்பந் தெரிந்து
மக்கட் குணர்த்தி அதையும் வளர்த்தாய்
யோக சுவாமிகள் தர்சனம் பெற்றும்
உண்மைத் தத்துவம் உணரத் தொடங்கினை
மக்களை மக்களாய் மதிக்கத் தெரிந்ததால்
கற்றுளோர் நின்னை மனிதனாய் அல்லப்
பெரிய மனிதனாய் பேச வாழ்ந்தனை
அன்போ டறிவு ஆன்ற ஞானம்
இன்புறு சிந்தை ஏய்ந்த புகழில்
இனிது வாழ்ந்த நினக்கு ஏனோ
இந்தப் பொல்லாக் குரோதன ஆண்டு
வந்தபுரட் டாதி செவ்வாய் வாரம்
இருபத் தொன்பான் தேதி யன்று
வளர்பிறைப் பிரதமை வாய்ப்பைக் காட்ட
இரவொன் பதுமணி என்னும் நேரம்
காலன் நினது கணக்கைப் புரட்டினன்
அன்பு மனையவள் அலறித் துடிக்க
இன்ப மக்கள் மருகர் பேரர்
துன்பக் கடலாஞ் சுழியிற் புக்கென
அந்தோ வென்று அழுது புலம்ப
போக வேண்டிய இடத்தைப் புரிந்தாய்
சுற்றி முடித்த மேலாம்
கற்றைச் சடையான் கழல்சரண் என்றே.

## மனையாள் இரங்கல்

இல்லத்துத் தீபத்தை எழில்கொஞ்சு இரவிதனை
நல்லறங்கள் எந்நாளும் நாட்டமுடன் செய்பவனை
வல்லகுல விநாயகனை மனமார வணங்குவனை
சொல்லரிய பணிசெய்யும் சோதியனைக் காணேனே.

கருவேறி உருவேறிக் காசினியிற் பின்னாளில்
திருவேற வேண்டுமெனத் தினமோதிப் புலமைபெற
ஒரு யாமம் ஓய்வின்றி ஊக்கமுடன் உழைத்தவனை
திரு நீறு மறவாத திருமேனி காணேனே.

மணஞ்செய்த மனைவியெனை மனம்பேணிக் காத்தவனை
சுணங்காது மக்களையும் சுடர்கால வைத்தவனை
இணங்காத எதிரியையும் இன்சொல்லால் இசைப்பவனை
கணந்தானுங் கசக்காத கற்கண்டைக் காணேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் இரங்கல்

என்ன தவஞ் செய்தோமோ நாங்கள் என்றே
எம்மிதயக் கோவிலிலே வைத்த தெய்வம்
கன்னல் மொழிப் பேச்சாலே எந்த நாளும்
கவலையே காணாமற் காத்த தெய்வம்
சொன்னமொழி தவறாதே உலகில் காட்டித்
துயரங்கள் பலவந்தும் கலங்காத் தெய்வம்
மின்னலென நீமறைந்த விந்தை கேட்டோம்
வேறுமொரு தெய்வமினி எங்குகாண்போம்.

## மருமக்கள் இரங்கல்

பெற்றதந்தைக் கொப்பாகப் புத்தி கேட்போம்
பெருமையுடன் நின்பெயரால் மதிக்க வாழ்ந்தோம்
மற்றொருவர்க் கொப்பில்லா வைத்தி யத்தில்
மதிப்பான புலமை பெற்ற எங்கள் மாமா
நற்கரும் யாவினுக்கும் பெருமை காண
நாயகமாம் நடுவிருந்தால் போதும் மாமா
வெற்றியரின் மருகரென மற்றோர் சொல்லும்
மேலான மொழிகேட்கப் பெற்றோம் அந்தோ.

## சுற்றம் அயல் இரங்கல்

சுற்றமென்றும் அயலென்றும் வாழ்ந்த எங்கள்
துயர்களையும் தீபமென நின்ற சோதி
பற்றறுத்தே எமைப்பிரிந்தாய் என்ற போது
பாலைவனம் ஆனதெங்கள் சோலைவனமே
உற்றதுணை எம்அயலில் உண்டோ செல்வா
உறுதுணையாம் புத்திசொலி மருந்தும் ஈய்ந்த
வெற்றியரே நற்றுணையாம் என்ற நாங்கள்
வேறுதுணை நாடியினிப் போவ தெங்கே.

## பேரர் பிரலாபம்

(வேறு)

பாட்டா நீயும் மறைந்தனையோ பகர்ந்த தமிழும் மறைந்திடுமோ
தமிழே தமிழே என்றுசொலி, தமிழின் சுவையை ஊட்டினையே
பாட்டா நீதான் மறைந்தாலும், பகர்ந்த தமிழ்தான் மறைந்திடுமோ?
அன்னை ஊட்டிய முலைப்பாலில், அமிழ்தாம் தமிழைக் கலந்தூட்டி
எம்மை வளர்த்தாள் ஈழத்தில் என்றும் மறவோம் தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை வாரி அணைத்தெம்மை தழுவும் மொழிதான் தமிழ்மொழியே
எந்தை தந்தை இறந்திடினும் எங்கள் சிந்தை தமிழ்மறவா.

தாலாட் டெல்லாந் தமிழ்ப்பாட்டு சாற்றிட அன்னை உறங்கினமே
காலால் நடக்கும் போதெல்லாம் கற்றிட ஊட்டினிர் தமிழமுதை.

சாலை கொட்டிச் சாய்ந்தாடி சாலை ஓடி விளையாடி
காலை மாலை கடவுளையும் கனிந்து வணங்கிய தமிழன்றோ.

ஆங்கிலங் கற்றுத் தாய்தந்தை அரச பதவி அமர்ந்தாலும்
ஈங்கெம தன்னை தமிழினிமை இல்லை என்றான் பாரதியே.

அன்புத் பாட்டா இங்கேநாம் அன்பால் எங்கள் கரம்கூப்பி
அன்பின் நினைவாய் அடிமலர்க்கே ஆற்றும் அஞ்சலி தமிழ்மொழியே.

## தேற்றப்பா

தோற்றம் யாவும் அழிந்தொழியும்
　　சொல்லும் இதையே சித்தாந்தம்
ஏற்றம் பேசும் மனிதா நீ
　　இதனைச் சற்றே சிந்தித்தால்
கூற்றம் வந்த போதும் நீ
　　கொல்லென் றொருக்கால் சிரியாயோ?
தேற்றம் கொண்டே மார்க்கண்டன்
　　சென்ற வழியைத் தேராயோ?

## ஆக்கியோன் கூற்று

ஆடிடும் அரங்காம் அவனியிலே - நாம்
நாடக மாடி நடிக்கின்றோம்
படிடும் பாட்டும் கூத்தெல்லாம் - நம்
பரசிவன் பார்த்துச் சிரிக்கின்றான்

சூரிய சந்திரர் விளக்கேற்றி - நாம்
சுதந்திர நாடகம் நடிக்கின்றோம்
பாரிய நாடகம் நாம்மகிழ - நம்
பரசிவன் கைகொட்டிச் சிரிக்கின்றான்.

கிட்லர் முசோலினி கென்னடியும் - அவர்
மட்டுமா இங்கே நடித்தார்கள்
துட்ட கைமுனு போன்றவரும் - பின்
தொடர்ந்து நாடகம் நடித்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவி மக்களைச் சுட்டுவிடும்
மோசாக் நாடக மோடியிலே - இங்கு
இப்போ நாடகம் நடிப்பதனை
எண்ணிச் சிரிக்கிறான் எம்சிவனே.

உத்தம சாந்தி பரகம்சர் - மற்
றெத்தனை அடியார் அடித்தார்கள்
நித்தியம் அறிந்து நடிப்பவரே - உயர்
உத்தம நாடகம் நடிப்பவராம்.

உயர்திரு ச அப்பாக்குட்டி டாக்டர் வெற்றிவேலு
அவர்களின் ஆன்மா சாந்தியடைவதாக


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
மனைவியும் மக்களும்
மருமக்களும்

22, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்,
14-11-85

---

இதனை அன்பளிப்புச் செய்தவர் வண்ணார்பண்ணை திரு. சி. முத்துத்தம்பி அவர்கள்



## முந்நாள் செனற்றரும் இராசாத்தி அப்புக்காத்துவுமான திருவாளர் சோ. நடேசன் அவர்கள்,

# அனுதாபச் செய்தி

சண்முகம் அப்பாக்குட்டி வெற்றிவேலு அவர்கள் 1920 ஆம் ஆண்டு லொறன்ஸ் கல்விச் சகாய நிதிப் போட்டியில் சிறப்புத் தேர்ச்சி பெற்று றேயல் கல்லூரியில் சேர்ந்து படித்த நாள் முதல் அவரது சீரியநட்பையும் நன்நம்பிக்கையையும் பெறும்பேறு எனக்குக் கிடைத்தது. இன்றைய அபாய கரமான சூழ்நிலை காரணமாக நாங்கள் அவரது மரணச் சடங்குகளில் பங்குபற்றும் பேற்றினை இழந்தவரானோம். அவரது உடல் தீயுடன் சங் கமமாகும் வேளையில் கலந்து கொள்ள முடியவில்லை.

உலகம் நிலையற்றது. வாழ்வும் நிலையற்றது. இது இயற்கை நியதி. ஆனால் தம் புகழை நிலைநிறுத்துவதே சிறந்த பேறாகும். ''ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது. ஊதியம் இல்லை உயிர்க்கு'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் இலக்க ணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தார். திடீ ரென அவரது மறைவு ஏற்பட்டது. அவரது உடல் தீயுடன் சங்கமமா கிப் புனிதராக மறைந்தார். அவ்வேளை மரண கிரியைகளில் கலந்து கொள் ளும் வாய்ப்பு இல்லாமற் போயது எனக்குப் பெரும் துயரைத் தருகின்றது.

நாம் அவரது கைராசியையும், அன்பு நிறைந்த புன்சிரிப்பையும் இனிய பேச்சையும் இனிமேல் கேட்கவே முடியாது. அவர் வைத்திய கலா நிதியாக வந்த நாள் முதல் நோயால் துன்புறும் மக்களுக்கு அயராது தளராது சேவை செய்தார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என வாணாள் முழுதும் அவரது இனிய பண்பையும், அன்பையும், மருந்தை யும் கலந்து கொடுத்து மக்கள் உடல் நலம் பேணும் வைத்திய கலாநிதி யாகவும், உளமறிந்து ஒழுகும் ஒப்புரவுடைய சான்றோனாகவும் திகழ்ந்தார். அவர் மறைந்தாலும் வருங்கால சந்ததிக்கு வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய நெறிபெரு நிதியமாகும். வளரும் சமுதாயம் அவரது அடிச்சுவட்டைப் பேணி வருமானால் அவருக்கு நாம் நாம் செய்யும் நன் றிக்கடனாக இருக்கும். நாம் அவரின் சீரிய வாழ்க்கை நெறியினைப் பின் பற்றுவோமாக.

சமூக சேவைக்கு இன்றியமையாத துணையாக இருந்தது அவரது இன்ப மயமான இல்லற வாழக்கை. இல்லறத்தார்க்குரிய வழியிலே வாழ்ந்தார். மனிதர்களால் போற்றப்படும் புனிதருமானார்.

திருவள்ளுவப் பெருந்தகை தமிழ் நாகரிகத்தின் உரை கல்லாக தமிழர் அகப்புற வாழவின் இலக்கணமாக இம்மையிலேயே மறுமைப் பயனையும் நுகரும் ஒளிவிளக்காக குறள்மணிகளை விதைத்துள்ளார். இவைகளை இன் பக் களஞ்சியமாகத் தமிழின் இனிமைக்கும் முதுமைக்கும் ஒப்பற்ற மாமருந்

தாகத் தந்துள்ளார். திருக்குறளைத் தமிழ் வேதமென்று நாம் போற்று கின்றோம். அப்புனித நூலில் இல்வாழ்க்கையின் மாண்புகள் விளக்கப்படு கின்றன. இவரது வாழ்க்கை திருவள்ளுவரின் குறளின் விளக்கமாகும்.

அறவழியிலே பொருளைத் தேடி இன பந்துயத்தல் வேண்டும். பொருள் சேர்க்கும் போது பழிக்கு அஞ்சிச் சேர்த்து செலவு செய்யும் போது மற் றவர்களோடு பகுத்துண்டு வாழ்ந்து வருவோமாறல் இல்லறமல்லது நல் லறமன்று என்ற ஆன்றோர் மொழிக்கு ஆக்கங் கொடுத்தவராவோம். இவ ரது வாழ்வு தமிழர் பண்பாட்டுக்கு உறைவிடமாக இருந்துள்ளது. மனத் துக் கண்மாசு அற்றவராய், அறத்தையே வாழ்வின் அடிப்படையாக வைத்து வாழ்ந்தார். அவர் மனைவி, மக்கள், சுற்றம் பேணும் அன்பராய்த் தனது சமூகம் காக்கும் - சிறப்பாக - வறியவர்க்கும், துறவியர்க்கும், விருந் தினர்க்கும், தன் தெய்வத்திற்கும் தொண்டு செய்யும் பண்பினராய் அற வழியிலே ஈட்டிய பொருளை அள்ளிக் கொடுக்கும் கடமையாளராய் ஒளி மயமான வாழ்க்கைக்கு உதவினர்.

சீரும்சிறப்புமாக வாழ்ந்த பெரியார் தம் பணியைத் தொடர்வதற்கு ''ஏழிசை வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு'' வாழ்வதற்காக -சமூக சேவையாளராகத் தமது வழித் தோன்றல்களைச் சான்றோராக உரு வாக்கியுள்ளார். இவர் சேவை காலத்தால் கவரப்படாதது. வாழையடி வாழையாகத் தொடர இறைவன் இவருக்கு வழிவகுத்துள்ளான். இவை இவரது வாழ்க்கைக்கு மேலும் விளக்கந் தருகின்றன.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்'' (திருக்குறள்)

இத்தகைய பெரியாருக்கு எமது நாட்டின் தற்போதைய நிலை கார ணமாக இறுதிக் காலங்களில் இன்னல்கள் பல ஏற்பட்டன. இத்துன்பங் களால் தமது மனச்சாந்தியையும், அமைதியையும், அன்பையும், அடக்கத் தையும் அவர் இழக்கவில்லை. கடவுள் திருவருள் அவருக்குத் துணை நின்றது.

துன்பம் நெருங்கி வந்த போதும் சோர்ந்துவிடாது தெய்வ நம்பிக்கை திடத்தைக் கொடுத்தது.

''அவனின்றி ஓர் அணுவும் அசையாது'' என்ற சைவசித்தாந்தத்தின் உறுதிப்பாடு, அடிப்படை உண்மையாக நின்று சாந்தியை அளித்துக் கொண் டிருந்தது. வாழ்வின் முடிவு நேரத்தில் திருவாசகம் என்னும் திவ்விய நூலில் மனதை பறிகொடுத்துத் திருவாசகத் தேனை நுகர்ந்தார். அப் பேரின்பத்தில் திளைத்து இறைவனடி சேர்ந்தார்.

கொழும்பு:- 6-11-85

சோ. நடேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. ச. அ. வெற்றிவேலு

நெற்றியிலே திருநீற்றுத் திலகம் தவழ, வான்முகத்தில் வரவேற்கும் புன்முறுவல் திகழ, கையுயர்த்தித் தவிசிருத்தி, சுகங்கேட்டு, நண்பகலோ நடுநிசியோ தன் சுகமே பாராது நாள்தோறும் பலதரத்து மக்கள் துன்பும் துயரும் தம் இறுதிவரை துடைத்த அண்ணல் வெற்றியர் என்றென்றும் வெற்றிவேற் சின்னமாக யாழ் மக்கள் தம் மனத்துச் சுடரொளியாய் விழங்கவைத்துச் சடுதியாய் மறைந்தனரே.

அன்னாரின் அன்பு அறம் ஞானம் கல்வி பண்பு பக்தி ஆற்றல் சிரத்தை ஆகியவற்றைக் கண்டு வியந்தவர் பலர். மருத்துவம் மட்டுமன்றி விவசாயம் அரசியல், பொருளியல், சமயம் ஆகிய பல துறைகளில் அறிவும் ஆற்றலும் ஆர்வமும் தேர்ச்சியும் சாதனையும் மிகுந்தவர். உடுக்கையிழந்தவன்கைபோல் இடுக்கண் களைந்த நண்பர். விறல் மந்திரிபோல் வரும் பொருள் நோக்கி அறிவுரை கூறும் ஆலோசகர்.

இறைவனிடம் தனக்காக எதையும் வேண்டாத பேரன்பன். கதிர்காம யாத்திரை சென்ற Dr. குமாரசாமி வழியில் தனக்கு ஏற்பட்ட இடரை சடுதியாகத் தோன்றி மறைந்த துறவி நீக்கியதையும், Dr. வெற்றிவேலுவின் சேமம் கேட்டு, அவர் தம் பக்தன் எனக் கூறியதையும் செய்தித்தாளில் (Daily News or observer) எழுதியிருந்தார். எவ்வுயிரிலும் இறைமை கண்ட இப்பெரியார் இறுதியிலும் சுகதேகியாய் திருமறை ஓதிய வண்ணம் மறைந்தனர்.

"வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நா. வீரசிங்கம்
B. A. (Lond) Dip in Edu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appreciation

# The Late Dr. S. A. VETTIVELU

Born: 13th July 1901
Called to Rest: 15th October 1985.

A glorious chapter in the annals of medical philanthropy in JAFFNA has come to an end with the demise of Dr. S. A. VETTIVELU on 15-10-1985. 'VETTIYAR' to thousands of people who rushed to him at the onset of any illness. This staunch disciple of Hippocrates was all hope and help to both the rich and the poor at a time when a visit to the Government Hospital was a dreaded thing.

He died at the ripe old age of 84 full of tears and honours.

What manner of man was 'VETTIVELU' - the people's eminent doctor who so magically won the hearts of all people who went to him for medical or other kinds of help.

The immortal poet 'Thiruvalluvar' likens the wise man to a fruit tree in full bloom in the vicinity; and if such a man happens to be a healer of the sick, he is a more indispensable thing - a medicinal tree. The people of Jaffna feel orphaned at the felling of this wonderful tree - old as it was - that spread its shadow to thousands who sought refuge.

It was indeed a trait of his practical wisdom that he gave up Government Service well in time to spend the most mature part of his life in alleviating the sufferings of his people without consulting fees (not from all) and sometimes with free drugs: But one had to reckon with the long queue that started lengthening with Sun rise; But when the Sun rose, people did feel that their saviour was on his feet.

He did follow in the footsteps of the Greatest Phillanthropist in Jaffna the Late Retired Provincial Surgeon Dr. S. Subramaniam popularly known as 'PS'. The ready smile on the lips of both was key to people's unbounded affection to these man-gods.

An agriculturist, horticultist, a keen but quiet participant of the affairs of the country, he was obviously agitated by the turn of events to his people whose welfare was always near and dear to his heart.

To one who had mastered the art of living wisely and well, his anxiety for his son - the former M. P. for JAFFNA. (Mr. V. YOGESWARAN) separated from him during the present impasse, cut short a career which would normally be that of a Centenarian par excellence.

He, however leaves behind a tradition richer in professional skills and medical ethics; and it is left for others of such high mindedness to fill the gap. The need for such noble men has always been pressing but never more so than now. May God Kailasapillaiyar grant his soul eternal rest.

Canagasabai Vamadeva,
327, Navalar Road, Jaffna.
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REMEMBERANCE

# Dr. S. A. Vettivelu ("Vettiyar")

*Eminent Physician and Great Philanthropist*

As 14-11-85 "Anthiyeshti" (31st day) is drawing nigh, with folded hands praying to Almighty God and remembering you - I write these few lines:-

"Our Vettivelu Appah", you departed from us blissfully without any sweet utterances whatsoever to your better-half, (Baby acca), beloved children and in-Law-Dr. Jeyapragasan. Instead,-before your last breath, you sang a Thevaram coveting all of us which we shall remember and not forget at all times. Almighty God whispered to you to come along with him and stay in Heaven-thereby you followed. You had left us in the lurch, numb and speechless.

You are quite safe / in the hearts and arms of Almighty. Safe on his gentle breast Sweetly you will rest in peace.

Memorable and glorious day 15-10-85. Death knows no time nor place; Indeed cruel of fate to have snatched him so soon.

"How can I praise thee and not overpraise and yet not mar the grace by stint thereof."

We in toto, miss your friendly smile, love and tenderness. Today and Tomorrow our life through, we are quite confident that you are in the presence of God Murugan and your mighty prayers will be heard. Also, my Dearest Appah, We hereby feel your spiritual and striking presence among us and it gives strength after strength even after your farewell. Your life is a beautiful memory. Remembering kith and kin always satisfies my heart But Rememberance of yours in particular is a tonic too. Your loss is an everlasting sorrow. We are deeply grieved. Shedding tears profusely, We dip our home flag. "Your life is a procession".

At the stroke of your pen, the preseriptions you gave us, will ever be with us for repetition.

Great is Dr. Vettivelu Appah who has a progeny of Doctors in his family.

"Sure is the death of all that is born,
Sure is the birth of all that dies,
So in a matter that none can prevent, one ought not to grieve."

"He is never born and he never dies,
He is for Eternity,
He is for Evermore,
Never born and eternal beyond times gone or to come.
He does not die when the body dies".


All in tears at residence and Villundi crematorium, Columbuthurai. I dare say, of all whom I know, "Vettivelu Appah" is the wisest, the more just and the best.

Fondly remembering you.

Miss Mathyvathany Vamadeva
5-11-85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



PRINTED AT: ABRAMI PRINTERS, 158, HOSPITAL, ROAD, JAFFNA. PHONE: 24784

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org